ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

==============================================================================

# 'உறுபசி" - நாவலில் பிறழ் நடத்தை உளவியல்

முனைவர். சு. விவேக லதா,
கௌரவ விரிவுரையாளர்,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
நாகலாபுரம், தூத்துகுகுடி.

==============================================================================

ஆய்வுச் சுருக்கம்;

உறுபசி என்ற நாவலின் கதாநாயகன் சம்பத். அந்த இளைஞனுடைய பிறழ் நடத்தைக்கான பல்வேறு உளவியல் காரணங்களை ஆய்வு செய்யும் உளவியல் ஆய்வாக, இந்த ஆய்வு அமைகின்றது. ஃபிராய்டின் Id, ego, super ego - பற்றி விளக்கம் அளிப்பதுடன் எஸ்.ராமகிருஸ்ணனின் படைப்புகளில் உளவியல் கூறுகள் பற்றியும் அவருடைய படைப்புகளில் நடந்த ஆய்வுகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பத்துடைய குணங்கள் – தான் நினைப்பதைச் செய்தல், தன் கருத்தைத் திணித்தல்,பிறர் நிலை குறித்துச் சிந்தியாமை, பிறரை இக்கட்டுக்குள்ளாக்கல், புண்படுத்தல், முரண்படும் தன்மை, வித்தியாசமான பழக்கவழக்கங்கள் மற்றும் அத்துமீறல்கள் போன்றன. அவனிடம் காணப்படும் , இத்தகைய எதிர்மறைப் பண்புகளை பிராய்டு, யுங் போன்ற உளவியலாளர்களின் கூற்றுகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யப்படுகின்றது. மு.தங்கேஸ்வரன் என்பவர் 'ராமகிருஸ்ணனின் 'நீரிலும் நடக்கலாம்' சிறுகதைத் தொகுப்பில் உளவியல்' என்ற தலைப்பில் கதாபாத்திர உளவியல் ஆய்வு செய்துள்ளார். பிறழ் நடத்தைகள் குறித்து ஆய்வுகள் வெளிவராத நிலையில் இந்த ஆய்வு பிறழ் நடத்தை உளவியல் ஆய்வாக அமைகின்றது. இன்றைய மாணவர்களுடன் கலந்துரையாடி, பெறப்பட்ட தரவுகள் மூலம் தீர்வுகளும் பரிந்துரைகளும் முடிவுகளாகக் கூறப்பட்டுள்ளன.
குறிப்பு சொற்கள்: 'உறுபசி", நாவல், பிறழ் நடத்தை உளவியல், எஸ்.ராமகிருஸ்ணன்.

## ஆய்வு நோக்கம்:

சம்பத் என்ற கல்லூரி மாணவனுடைய பிறழ் நடத்தைகள் பின்னாட்களில் அவனுடைய வாழ்வை வெறுமையாக்குகின்றன. சம்பத்தைப் போன்ற மாணவர்களை நாம் அன்றாடம் சந்திக்க நேரிடுகின்றது. அவர்களுடைய எதிர்கால வாழ்வும் வெறுமையாகிவிடக் கூடாது என்ற சமூக நலச் சிந்தனையுடன், சம்பத்துடைய பிறழ்நடத்தையை உளவியல் பகுப்பு ஆய்வுக்கு உட்படுத்தி, தீர்வு காண்பதன் மூலம் இன்றைய மாணவர்களுக்கு வழிகாட்டலாம் என்ற நோக்கத்துடன் இந்த உளவியல் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## முன்னுரை:

சமீப காலங்களில் செய்திகள் கேட்பதற்கும், வாசிப்பதற்கும் பயமாக உள்ளது. முன்பெல்லாம் ஒரு விபத்தோ, கொலையோ, தற்கொலையோ நிகழ்ந்தால் அதைப் பெரிதாகப் பேசுவோம். ஆனால் இன்று? புதிய புதிய வகைகளில் குற்றச் செயல்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. மனிதன் மனிதத் தன்மையைப் படிப்படியாக இழந்து கொண்டே வருகின்றானா? சமுதாயத்தில் நமக்குப் பாதுகாப்பு இருக்கிறதா? தமிமனித மனங்களில் ஏன் இத்தனை மிருகத்தனம் குடிகொண்டது? என்ற உளவியல் நோக்குடன் சிந்திக்க ஆரம்பித்து விட்டோம்.

இத்தகைய தனிமனிதர்கள் நிகழ்த்தும் சமூக முரண்பாட்டுச் செயல்களைப் படைப்பாளர்களும் பதிவு செய்யத் தவறவில்லை. இலக்கியம் என்பது காலத்தைக் காட்டும் கண்ணாடிதானே. ஜெயமோகன், பவா செல்லத்துரை, எஸ்.ராமகிருஸ்ணன் ......என்ற நீண்ட

பட்டியல் கொண்ட நவீன இலக்கியவாதிகள் தங்களுடைய கதாநாயகர்களாகக் குற்றவாளிகளையும், சமுதாயத்தில் புறக்கணிக்கப் பட்டவர்களையும் படைத்திருக்கின்றனர்.

அந்த வகையில் எஸ்.ராமகிருஸ்ணனுடைய பெரும்பாலான நாவல்கள் வரலாறு, சமூகம், உளவியல் --என்ற வகைகளில் களஆய்வு செய்து படைக்கப்பட்டவை என எண்ணத் தோன்றும். சஞ்சாரம் --என்ற சாகித்ய அகாதமி பரிசு பெற்ற அவரது நாவல் -நாதஸ்வரத்தின் நுட்பமான தயாரிப்பு முதல் நாதசுவரம் வாசிக்கும் முறைகள், பயிற்சிகள், முகலாயர் அரசவையில் நாதஸ்வரம், இன்று அக்கலைஞர்களின் நிலை என அவர்களுடைய இனவரைவியலாகப் படைக்கப்பட்டுள்ளது..

அதுபோல் உறுபசி என்ற அவரது நாவலில் சம்பத் என்ற பிறழ் நடத்தை கொண்ட இளைஞனுடைய பல்வேறு வகையான பசிகளையும், குடும்பத்துடனும், நண்பர்களுடனும், இச் சமுதாயத்துடனும் முரண்பட்ட தன்மையையும், சாவை விரும்பி வரவேற்கும் தடம்புரண்ட அறிவாளித்தனத்தையும் பதிவு செய்துள்ளார்.

மனித மனம் பல்வேறுபட்ட உணர்ச்சிகளுக்கு ஆட்படுவதற்குக் காரணங்கள் - சில புறத்தூண்டல்களும், அகத்தூண்டல்களும் தான். சில பொருட்களையோ, இடங்களையோ, மனிதர்களையோ, செய்திகளையோ – பார்த்தால், கேட்டால், சந்திக்க நேர்ந்தால் – மகிழ்ச்சி, நிறைவு, களிப்பு போன்ற நேர்மறை உணர்ச்சிகள் ஏற்படும், சிலசமயம் கோபம், அச்சம், வெறுப்பு, கழிவிரக்கம் போன்ற எதிர்மறை உணர்ச்சிகளும் ஏற்படும். இத்தகைய அகவுணர்ச்சிகள் சிலசமயம் அறிவை மழுங்கடித்துப் புறத்தூண்டல்களினால் சில எதிர்மறைவிளைவுகளை (களவு, கொலை) ஆற்றுவதால் குற்றங்களும் தீய வளைவுகளும் நொடியில் நிழ்ந்துவிடுகின்றன.

சிறுவயதில் செய்த நற்செயல்கள், பாராட்டுகள், அங்கீகாரங்கள், பரிசுகள் போன்றவை பின்னாட்களில் நல்ல திடமான மனநிலையை ஏற்படுத்தும். அதே சமயம் சிறுவயதுக் குற்றங்கள், அவமானங்கள், ஏச்சுக்கள், வீண் பழிகள் - போன்றன தீராப் பகையையும் - ஆறா வடுக்களையும் ஏற்படுத்தி கட்டுப்பாடுகளை மீறக் கூடிய மனநிலையை ஏற்படுத்தும். ஆசைகளும், தேவைகளும் நிறைவேறாத போதுதான் குற்றங்கள் நிகழ்கின்றன.

ஆழ்மனதில் தூங்கிக்கொண்டிருக்கும் நேர்மறை எண்ணங்களும், எதிர்மறை எண்ணங்களும், தம் ஆசைகளும் தேவைகளும் - குறைபாடுடன் இருக்கும்போது புறத்தூண்டல் காரணிகளாக அமைகின்றன.

'சம்பத்' என்ற நண்பனுடைய மரணம்,அவனுடைய நண்பர்களிடம் ஏற்படுத்திய தாக்கங்கள், நினைவுகூர்தல், நினைவுகூறல், உரையாடல்கள், அழுகைகள் வாயிலாக சம்பத்துடைய உளவியல் சிக்கல்கள் வாசகனுக்குத் தெரியவருகின்றன. அவனுடைய உளவியல் சிக்கல்கள் குறித்து இங்கு விரிவாக காணலாம்.

எந்தவொரு மனிதனும் 100% நல்லவன் என்றோ 100% கெட்டவன் என்றோ கூறமுடியாது. 55-60% நல்லவன், 45-50% கெட்டவன் என சிறிய அளவில்தான் இந்த பெரிய பெயர் சூட்டப்படுகிறது.

சம்பத் தான் நினைப்பij மட்டுமே நிறைவேற்றிக் கொள்ளும் தன்னலம் பிடித்தவனாக பிறர்நலனை குறித்தோ, அவர்களுடைய சூழல் குறித்தோ, சிறிதும் கவலை கொள்ளாமல் தன் கருத்தை மட்டுமே நிலைநாட்டுவனாக நாவல் முழுதும் வலம் வருகிறான்.

இடம், பொருள், ஏவல் தெரியாமல் தனக்கு நெருக்கமானவர்களையே இக்கட்டுக்குள்ளாக்கி, புண்படுத்தி – அதைக் கண்டு மகிழ்ச்சியடைபவனாக இருக்கிறான். எந்த இடத்திலும் யாருடனும் ஒத்துப்போகாமல் முரண்படுபவனாகவும், பிறரிடமிருந்து வேறுபட்ட பழக்க வழக்கத்தை உடையவனாகவும் இருக்கிறான். சமுதாய நியதிகளைக் கட்டுடைப்பவனாக, எல்லைகளை, இலக்கணங்களை, வரம்புகளை மீறுபவனாகக் காணப்படுகின்றான். அதற்காக வன்முறையிலும் ஈடுபடுகிறான். தனக்கு ஏற்படும் பாலியல் உணர்வுகளை கட்டுப்படுத்தவோ, மடைமாற்றம் செய்யவோ இயலாதவனாகக் காணப்படுகிறான். அவனுக்குத் தன்னைப் பற்றிய சுய மதிப்பீடு – உயர்வானதாக இல்லை.

இவையனைத்தும் சம்பத்திடம் காணப்படும் உளவியல் சிக்கல்கள். அவனது இறப்பு அவனது மனைவியிடமும், அவனது நணபர்களான மாரியப்பன், அழகர், ராமதுரை போன்றோரிடம் ஏற்படுத்திய உளவியல் தாங்கங்களையும் இக்கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

*நினைப்பதை நிறைவேற்றும் குணம்:*

*பிறர் செய்யத் தயங்குகின்ற செயல்களை, பிறர் நடக்க யோசிக்கின்ற பாதைகளில் - அது சரியோ, தவறோ – தாம் அதைச் செய்வதன் மூலம் பிறரைத் தன் பக்கம் ஈர்த்தல், கவனிக்கச் செய்தல் - என்பது மனித மனச் செயல்பாடுகள்.*

*சம்பத் இத்தகைய செயல்களையே வாழ்க்கை முழுவதும் செய்தவன். புதுமைப் பித்தன், ஜெயகாந்தன், சில கவிஞர்கள், படைப்பாளர்கள் என அறிஞர்கள் சிலர் இப்படிப்பட்டவர்களாக இருப்பார்கள்.*

*இவனது நண்பர்களுக்கு தேவையில்லாத, ஆனால் இவன் விற்க வேண்டிய நூல்களை ஆளுக்கு 1 செட் கொடுத்து 80 ரூ பணம் வேண்டும் எனக் கட்டாயப்படுத்திப் பெற்றுக்கொள்கிறான் . அந்த மாணவர்களின் பொருளாதார நிலை குறித்தோ, அவர்களுடைய விருப்பங்கள் குறித்தோ எள்ளளவும்; சிந்திக்காமல், தான் நினைத்ததை நிறைவேற்றிக்கொள்கிறான்.*

*யாழினி என்ற வகுப்புத் தோழியின் வீட்டிலிருந்து கிளம்ப இரவு வெகுநேரம் ஆகிவிட்டால், விடுதிக்குச் செல்ல முடியாத நிலை. உடன் வந்த நண்பனின் கருத்துக்களையோ, விருப்பத்தையோ கேட்காமல் சந்து சந்தாகச் சுற்றியலைந்து, தூக்கம் வந்த பிறகு கன்னியாகுமரி பேருந்தில் ஏறி, நண்பனை டிக்கெட் எடுக்கச் செய்து அங்கு சென்று நூல்களை விற்க முயற்சித்து முடியாமல், திரும்பி வரவும் பணமில்லாமல; - இரயிலில் பயணம் செய்ய முடிவு செய்து நண்பனைத் தனியே இரயில்நிலையத்தில் தவிக்க விட்டுவிட்டு, காணாமல் போய்விடுகிறான். இரவு இரயில் கிளம்புமுன் அவசர அவசரமாக பிரியாணியுடன் வந்து நண்பனுடன் பயணிக்கிறான். 'எலி எள்ளுக்காக காயலாம் எலி புளுக்கை எதற்காகக் காய வேண்டும்?' (எஸ்.ராமகிருஸ்ணன், 2012) என்ற பழமொழி நினைவுக்கு வருகிறது. சம்பத் ஊர்சுற்ற வேண்டும், புத்தகம் விற்க வேண்டுமென்றால், பிறரையும் தன் ஆளுகைக்குட்படுத்தி தான் நினைப்பதை நிறைவேற்றிக் கொள்கிறான்.*

*மதுரையில் நடுரோட்டில் பார்த்த மாரியப்பனைத் திண்டுக்கல்லுக்குத் தன் தொழில் ரீதியான பயணத்துக்கு – உடன் அழைத்துச் சென்று, மீண்டும் மதுரை லாட்ஜ்க்கு வந்து தங்கி, அவDடைய நேரத்தையும் பணத்தையும் வீணாக்கி, தனது எண்ணத்தை நிறைவேற்றுகின்றான்.*

> *''இருவரும் மதுரைக்குக் கிளம்பலாம் என்று முடிவு செய்து பேருந்து நிலையத்திற்கு வந்தபோது, உடனே மதுரைக்குப் போய் என்ன செய்யப் போகிறோம், சினிமாவிற்குப் போகலாம் என்றான்.அவன் சொல்வதை மறுக்க முடியாதபடி ஏதோ ஒரு மந்திரம் அவனிடமிருந்தது.'' (எஸ்.ராமகிருஸ்ணன், 2012)*

*இங்ஙனம் ராமதுரையிடம் மன்னிப்பு கேட்க எண்ணி, அவனை வீட்டிலிருந்து கடற்கரைக்கும், கடற்கரையிலிருந்து வீட்டுக்குமாக நடக்கவைத்தல் (ப.11) எஸ்.ராமகிருஸ்ணன்*

*இன்றைய இளைஞர்களில் பெரும்பாலனோர் இத்தகைய எண்ணம் கொண்டவர்களாக இருக்கின்றனர். குடும்பத்தினர், சமுதாயம் இவர்களுக்கும் தமக்கும் எந்தத் தொடர்புமில்லை என்ற வரம்பு மீறிய எண்ணத்துடன் வாழ்கின்றனர்.*

- *'பெற்ற பெண்குழந்தையைத் தாயே 5 லட்சத்திற்கு விற்கும் மனப்பான்மை' (தினமலர் - 22.12.22).- நெல்லை பதிப்பு*
- *'சூதாட்டத்தில் தன்னையே வைத்து இழந்த பெண்' (தினமலர் - 06.12.22) நெல்லை பதிப்பு*

*பெண்களே எது குறித்தும் சிந்திக்காமல் தான்தோன்றித் தனமாக உளவியல் நெருடல்கள் இன்றி மேற்கண்ட சமூகம் ஏற்காத செயல்களைச் செய்கின்றனர்.*

> *தன் முனைப்பின் ஆசைகளை விருப்பங்களைச் செயல்படுத்துவதில் தன் முணைப்பு Ego பண்பட்ட உள்ளம் (Super ego). இரண்டிற்கும் போராட்டம் நிகழும். மேம்பாட்டுள்ளம் தன் முனைப்பின் மீது ஆதிக்கம் செலுத்தி வந்தால், அவன் வலிமையற்ற தன்முனைப்பு உடையவனாகின்றான். (12) (செ.சாரதாம்பாள், 2019)*

*யுங், 'தன் முனைப்பு என்பது நனவு மனத்தையே குறிக்கும்.' தன்னுணர்வு அல்லது தன்னுணர்வாற்றல் நனவிலியின் பக்கமே இயங்கும்.'' (14) --- என்கின்றார். (செ.சாரதாம்பாள், 2019)*

*'பிராய்டு, யுங், ஆல்பிரட் அட்லர், கேரன் ஆர்ன், எரிக், எச், எரிக்சன் போன்றோர் தன்முனைப்பின் உளவியலை விளக்குகின்றனர். (26) (செ.சாரதாம்பாள், 2019)*

*தனது கருத்தைச் திணித்தல்*

கடவுள் நம்பிக்கை, டீ குடிப்பது, உண்பது, லாட்டரி வாங்குவது, திருமணம் செய்வது, செலவு செய்வது – என தனது கருத்துக்களைப் பிறரிடம் திணிக்கின்றான் சம்பத்.

இத்தகைய 'தன்னை மையப்படுத்தும் கதாபாத்திரங்களைச் சில குடும்பங்களில் காணமுடியும். இவர்களுக்காக எல்லோரும் தங்களது கருத்துக்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனக் கட்டாயப்படுத்துவார்.

'கடவுள் தனிநபர் சம்பந்தப்பட்ட விஷயமல்ல ...' (31)

'கேலிசெய்தான். கோபமாகத் தன் கருத்துக்களைப் புகுத்தினான்

'நீ சாமியார் ஆவதால் மற்றவர்களுக்கு எந்த நலனும் ஆகப்போவதில்லை

...' கடவுள் மறுப்புக் கொள்கைக்காக வகுப்பறையில் வாதம் புரிந்தான்..... என்றே தோன்றும் (92) எஸ்.ராமகிருஸ்ணன்

'யாழினியின் அப்பாவுடன் கம்பராமாயணம் சொற்பொழிவுக்கு செல்வது குறித்து வாதம் புரிந்தான் (92) (எஸ்.ராமகிருஸ்ணன், 2012)

சிறுவயதிலிருந்தே இவனது கருத்துக்களைக் கேட்பதற்கு எவருமில்லை: அங்கீகரிக்கவுமில்லை என்ற ஏக்கம் ஆழ்மனதில் கிடப்பதால் அழுத்தத்தால் தன் கருத்துக்களைப் பிறரிடம் புகுத்துகின்றான்.

இத்தகைய கருத்துதிணிப்புவாதிகள் பெரும்பாலும் பிறருடைய கருத்துக்களைச் செவிமடுக்க மாட்டார்கள்; செவிமடுத்தாலும் அவற்றைக் கேலி செய்து, மறுத்துரைத்து – ஏற்றுக்கொள்ள மாட்டார்.

> தன் முனைப்பின் ஆசைகளை விருப்பங்களைச் செயல்படுத்துவதில் தன் முனைப்பு Ego, பண்பட்ட உள்ளம் (Super ego). இரண்டிற்கும் போராட்டம் நிகழும். மேம்பாட்டுள்ளம் தன் முனைப்பின் மீது ஆதிக்கம் செலுத்தி வந்தால், அவன் வலிமையற்ற தன்முனைப்பு உடையவனாகின்றான். (12) (செ.சாரதாம்பாள், 2019)
>
> சமூக ஏற்பு கிடைக்காத போது, விருப்பங்களும், உந்துதல்களும் ஒடுக்கப்பட்டுத் தனிமனித நனவிலியாக அமையும். நனவிலியின் மையக் கூறு தன் முனைப்பிற்குக் கட்டுப்படாது. இது தான் உளச்சிக்கல். (415) (செ.சாரதாம்பாள், 2019)

பிறர் நிலை குறித்து சிந்தியாமை

1. தாமரைக்குளம் என்ற ஊருக்கு நடந்து சென்று, குளத்தில் நிர்வாணமாக குளிப்பது, இயற்கையை இரசிப்பது என நேரம் கடத்தும்போது, உடன் வந்த நண்பனுடைய மனநிலை குறித்து எள்ளளவும் கவலைப்படாமல் இருந்தான்.
2. லாட்டரி சீட்டு எடுப்பதில் பங்குதாரராக STD BOOTH -ல் வேலை செய்யும் பெண்ணை, அவனே முடிவெடுத்து அவளிடம் 5ரூ பெற்றுக்கொள்கிறான். அவளுக்கு அதில் விருப்பமா, பணம் உள்ளதா என்ற கவலை இவனுக்கு இல்லை.
3. திருமண விஷயத்திலும், குழந்தை பெறவேண்டாம் என முடிவு செய்வதிலும் இதே கதைதான். இது தன்னலத்தின் வெளிப்பாடு. 'Id' தான் காரணம். பொதுவிடங்களில் ஆடையுடன் குளிக்க வேண்டும் என்பது சமூகக் கட்டுப்பாடு. சம்பத்துடைய Id அதை மீறுகின்றது.

முன்பின் அறியாத பெண்ணிடம் லாட்டரிச் சீட்டுக்குப் பங்கு கேட்பது - பின்விளைவுகள் ஏதாவது ஏற்படுமே என்ற பயம் இல்லாமைக்கு Id தான் காரணம். திருமணத்தில் சமூகக் கட்டுப்பாடு, அறநெறி -- என அனைத்தையும் Id மீறுகின்றது.

பிறரை இக்கட்டுக்குள்ளாக்கல்

1. சரளா என்ற பெண்ணுடன் ஆங்கிலப் படத்திற்கு வந்தபோது, குடும்பத்துடன் வந்திருந்த அழகிரி அவனைப் பார்ப்பதைத் தவிர்த்தாலும், சம்பத் தானே வந்து அறிமுகம் செய்தான். முகம் சுளித்த அவன் மனைவியிடம், 'இவ ரோட் சைடு பிராத்தல் (10-11)' என அறிமுகம் செய்கிறான். (எஸ்.ராமகிருஸ்ணன், 2012)

   கணவனது நண்பர் இப்படிப்பட்டவர் என்றால் கணவரும்.......? எனப் பெண்களின் சந்தேகத்திற்கு ஆளாக நேரிடும்.
2. இரயிலுக்காகக் காத்திருக்கும்போது, வரும் கன்னியாஸ்திரியின் கால்களைப் பிடித்துக் கொண்டு, 'என்னை மன்னித்து விடுங்கள் ......அந்தப் பெண்ணின் முன்னிருந்து வர

*மறுத்தான்' என தொடர்ந்து செய்வதால் அருகில் இருந்தவர்கள் பயந்துகொள்ளும்படி கன்னியாஸ்திரிக்கு இக்கட்டை உருவாக்கினான் (115) (எஸ்.ராமகிருஸ்ணன், 2012) - பிறரைக் கோபப்படுத்தி மகிழும் super ego மனப்பான்மை*

*அழகருக்குப் பொருளாதாரம், குடும்பம், வேலை -- என எல்லாம் வாய்த்திருக்கிறது: தனக்கு எதுவும் வாய்க்கவில்லை என்ற ஆழ்மன ஏக்கம் இங்ஙனம் செயல்பட வைக்கின்றது.*

*பொதுவிடங்களில் பெண்கள் --நாகரிகமாக நடப்பதையும், நடத்தப்படுவதையுமே விரும்புவர். அந்த ஆளுமையின் மீது கல்லெறிந்து, கோபப்படுத்தி, மகிழ்ச்சியடைவதும் ஆழ்மன ஏக்கம் - Id தான். கன்னியாஸ்திரியிடம் மன்னிப்புக் கேட்பது ஆழ்மனக் குற்ற உணர்வின் வெளிப்பாடுதான். அந்தப் பிறழ்நடத்தை சுற்றுப்புறத்தை மறக்கச் செய்கின்றது.*

*பிறரைப் புண்படுத்தி மகிழ்தல்:*

1. *பேராசிரியர்களுடன் வாக்குவாதம் செய்து, வகுப்பறையை விட்டு வெளியேறாமல், அவர்களை வெளியே போகச் சொல்வான். அவர்கள் படும் வேதனையைக் கண்டு மகிழ்வான்.*
2. *அழகர் மனைவியைப் பற்றி, 'கர்ப்பத்தடை, இடுப்பளவு குறித்து விவரிக்கவும். அழகர் படும் கோபத்தை இரசிக்கின்றான்.*
3. *மன்னிப்பு கேட்க வருவதாக கூறி எதுவும் பேசாமல் ஏமாறச்செய்வது. .*

*புண்படுத்தி மகிழ்வதும் Id, super ego தான் காரணம்.*

*சம்பத் வகுப்பிற்குக் கருப்புச்சட்டை அணிந்து வந்ததை அங்கீகரிக்காமல் கேலி செய்ததைப் பொறுக்காமல் எதிர்ப்பைக் காட்டுகிறான்.*

*பிறர் மனைவி, பெண்கள் குறித்துச் சில வரைமுறைகளுடன்தான் பேசவேண்டும் என்ற சமூகச் சட்டத்தை மீறுகின்றான்.*

*பிறரை எதிர்பார்க்க வைத்து ஏமாற்றி மகிழ்ச்சியடைகின்றான்.*

*சூழலுடன் முரண்படல்*

1. *வகுப்பறையில் பேராசிரியர்களுடன் முரண்படுவதுடன், சக மாணவியர்களுடனும் முரண்படுவான்.*
2. *வீட்டிலும் அனைவருடனும் முரண்படுவான்.*
3. *தங்கியிருக்கும் லாட்ஜ் உரிமையாளருடன் முரண்படுவது.*
4. *வேலைபார்க்கும் அச்சகத்தில் பணத்தைச் செலவு செய்துவிட்டு முதலாளியுடன் முரண்படல்.*

*இவனை அகமுகத்தவன் என்று கூறலாம்.எப்போதும் தன்வயப்பட்டவனாகவும், தத்துவ நாட்டமுடையவனாகவும், கற்பனையில் வாழ்பவனாகவும் இருப்பதால் சமூகத்தில் ஏற்புடைமை அற்றவனாக இருக்கின்றான் .இந்தத் தன்னலத்திற்கு 'Id' தான் செயல்காரணம். வள்ளுவனே இவர்களை,*

*'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்*
*கல்லார் அறிவில்லா தார்'' (திருக்குறள் -140)*

*என அறிவில்லாத முட்டாள் என்று வள்ளுவர் முடிவு செய்கிறார்.*

*வித்யாசமான பழக்கவழக்கங்கள்:*

1. *தீப்பெட்டியைப் பிறருக்குத் தரமாட்டான். அதற்குள் தீக்குச்சியைத் தவிர காசு,ஆணுறை ...என வைத்திருப்பான்.*
2. *சினிமா தியேட்டரில் போய் தூங்குவான்*
3. *லாட்டரி சீட்டு வாங்குவான்*
4. *இரவில் வெகுநேரம் கண்விழித்து, பகல் வெகுநேரம் தூங்குவான்*
5. *கடிகாரம், காலண்டர் - இவை தனக்குத் தேவையில்லை; இதன்படி நடக்க முடியாது என முடிவு செய்தான் –*
   *'குடிமடிந்து குற்றம் பெருகும்*
   *மடிமடிந்துமாண்ட உஞற்றி லவர்க்கு' (திருக்குறள் -604)*

*எனச் சோம்பல் குறித்துக் குறள் கூறுகின்றது.*

6. அக்பர், சிவவாக்கியர்.... போன்றோரின் கற்பனை போன் நபர்களை வைத்திருந்தான்.
7. தனக்குத் தானே பேசுவது; உறங்காமல் இருப்பது-

முறையற்ற பொருளை முறையற்ற இடத்தில் வெளிப்படையாக வைத்திருப்பது. படம்பார்க்கச் சென்றாலும் சோம்பேறித்தனமாகத் தூங்குவது. பணத் தேவைக்காக உழைக்காமல் குருட்டுத்தனமான பேராசை -லாட்டரி. முரண்பட்ட தூக்க நேரம், சித்தர்களின் கற்பனை போன் நம்பரை வைத்திருத்தல் ---இவையெல்லாம் நனவிலி மன ஆசைகள் தான்.

அகமுகத்தவர் எப்பொழுதும், தன் வயப்பட்டவராகவும், தத்துவத்தில் அதிக நாட்டம் உடையவராகவும், கற்பனையில் லயிப்பவராகவும் இருப்பர். இதனால் சமூகத்தில் ஏற்புடைமை அற்றவராகவும் காணப்படுவர். (17) (செ.சாரதாம்பாள், 2019)

பாலியல் சிக்கல்கள்:

1. சம்பத்தின்; அறைமுழுதும் அவலட்சணங்கள்
2. பாலுணர்வை மடைமாற்றம் செய்யத் தெரியாத புலம்பல்
   பொம்பளைப் பிள்ளைகளை வயதுக்கு வந்ததும் கட்டிக் கொடுத்து விடுவது போல நம்மையும் நடத்தினால் நன்றாகயிருக்குமில்லையா; இப்படி காம்ம் ஒரு கரையானைப் போல மெல்ல அரித்துத் தின்பதிலிருந்து தப்பிவிடலாமே.. ஒருவன வேலை கிடைத்து...' (எஸ்.ராமகிருஸ்ணன்).
3. கிடைத்த பெண்களுடனான உறவுகள்
4. அவனுடைய இறந்த உடல் அவனுடைய பாலியல் சிக்கல்கள் வெளிப்படுத்தின.
5. கட்டிய மனைவியுடன் அதீத வெறியுடன் செயல்படல், மனைவிக்கு உடலியல் துன்பங்கள் கொடுக்கின்றான்.

தன்னுடைய பாலியல் பிரச்சனை குறித்து மருத்துவரையோ, மூத்தோரையோ அணுகி, அறிவுரை, வழிகாட்டல் போன்றவற்றைப் பெற்று நெறிப்படுத்தி மடைமாற்றம் செய்து ஆக்கச் செயல்களில் ஈடுபட்டிருக்கலாம். உணவுமுறைகள், உடற்பயிற்சிகள், வாழ்வியல் முறைகளை மாற்றிச்; சரிசெய்திருக்கலாம். லிபிடா அடங்க மறுக்கிறது.

'ஒருமையிள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்புடைத்து' (திருக்குறள் -126)

என அடக்கமுடைமை பற்றி வள்ளுவம் உணர்த்துகின்றது.

இத்தகையோரை அதே பாலினத்தவர் நெறிப்படுத்த வேண்டும். எதிர்பாலினத்தோர் நெறிப்படுத்தினால் சிக்கல்கள் எழ வாய்ப்புள்ளது.

வன்முறைகள்

1. 'கரும்பு ஜீஸ் பிழியும் இயந்திரத்தை இயக்கும்போது'
   'அடுத்தவர்கள் மேல் உள்ள அத்தனை ஆத்திரத்தையும் கரும்பைச் சக்கையாகப் பிழியும்போது காட்டினால் மனதும் சாந்தமாகிவிடும்" .... (20) (எஸ்.ராமகிருஸ்ணன், 2012)
2. அச்சகப் பணம் 3000-ஐ செலவு செய்ததை, உரிமையாளர் கேட்டால், அவருடன் வாய்வார்த்தை முற்றி அடிதடியில் இறங்குதல்
3. ஊருக்குச் சென்ற இடத்தில் அப்பாவுடன் அடிதடியில் இறங்குதல்
4. மாணவனாக இருக்கும்போதே இராமாயணச் சொற்பொழிவின்போது அந்நூலைத் தீயிட்டுக் கொளுத்துதல். -

மன அழுத்தம், கோபம் அடிமனதில் உறைந்து கிடப்பதைக் கூறுகின்றான். உரிமையாளருக்கான பணம் தனக்குக் கிடைக்கவில்லையே என்ற ஆழ்மன ஏக்கம். பின் விளைவுகளை எண்ணிப்பார்க்காத மனம்--தரக்குறைவாகத் தம்மைப் பேசுவதை மறுக்க எண்ணும் மனம் புறத்தே தூண்டி வன்முறைக்கு வித்திடுகின்றது. சட்டங்களை மீறுவதும் ID தான். மனவலிதான் பொறுமையைக் கொடுக்கும். இத்தகையோரைக் குறள் மனவலிமையற்றவராகக் கூறுகின்றது. உலகப்பற்றில்லாதவன் பிறர் பழித்தலுக்கு நாணார்,

'அற்றாரைத் தேறுதல் ஓம்புகமற்று அவர்
பற்று இலர் நாணார் பழி' (திருக்குறள் - 506)

என வள்ளுவர் இத்தகையோரைப் பற்றி - super ego -குற்றவுணர்வு உள்ளோரின் உளவியலைக் கூறுகின்றார்.

*தன்னைப் பற்றிய சம்பத்தின்; மதிப்பீடு:*

1. *தன்னைப் பார்த்து; பிறர் பயப்படுகிறார்கள் (112)*
2. *புலனாய்வுப் பத்திரிக்கை தன்னைக் குற்றவாளியாக்கிடும் (113)*
   *"அந்தப் பத்திரிக்கையில் தொடர்ந்து ரெண்டு மாதம் வேலை செய்தால்.........தானும் ஏதாவது கொலை செய்ய முயற்சிக்கலாமா? என்று கூடத் தோன்றுகிறது". எஸ்.ராமகிருஸ்ணன்*
3. *தான் யாரையாவது கொன்று விடுவேனோ என்ற பயம்*
4. *வாழ்க்கை அற்பமானது- என்ற சிந்தனை*
   *'என்னால் எவரையும் நிம்மதியாக.. வைத்துக் கொள்ள முடியாது. என் சுபாவமே அப்படித்தான்.நீங்களாவது கொஞ்சம் விட்டுக் கொடுக்கிறீர்கள். என்னால் அப்படியிருக்க முடியாது...எவரும் சாந்தப்படுத்திவிட முடியவேயில்லை...... (62) (எஸ்.ராமகிருஸ்ணன், 2012)*
5. *யாழினியின் உறவு குறித்து மழுப்பலான விளக்கம்*

*தன்னைப்பற்றிய வலிமையற்ற சுயமதிப்பீட்டைக் கொண்டுள்ளான். தன் முனைப்பின் ஆசைகளை விருப்பங்களைச் செயல்படுத்துவதில் தன் முனைப்பு Ego பண்பட்ட உள்ளம் (Super ego). இரண்டிற்கும் போராட்டம் நிகழும். மேம்பாட்டுள்ளம் தன் முனைப்பின் மீது ஆதிக்கம் செலுத்தி வந்தால், அவன் வலிமையற்ற தன்முனைப்பு உடையவனாகின்றான். (செ.சாரதாம்பாள்-2019)*

*சம்பத் குறித்த நண்பர்களின் மதிப்பீடு:*

1. *யாழினி – சம்பத் - காதலிப்பதாக வகுப்பறையில் பேச்சு (50)*
2. *ராமதுரைக்கு திடீரென சம்பத் மீது ஆத்திரம் - எதையும் அனுபவிக்காமல் செத்துப்போனானே ..என்று.. திட்டிக்கொண்டேயிருந்தான்... (43)*
3. *பியானோ இசை நிகழ்ச்சி மென் உணர்ச்சிகளைத் தூண்டும். ஆனால் அதில் கலந்துகொண்ட பிறகு' மென் உளர் (48)*
4. *சம்பத்தின் மனதில் சுட்டுக் கொல்லப்பட வேண்டியவர்களின் பட்டியல் இருந்தது.*
5. *மருத்துவமனையில் 'பயந்த சிறுவனைப் போல நண்பனுடைய கைகளைப் பிடித்துக் கொண்டது – அவனது பயத்தைக் காட்டியது.*
6. *'அவன் செத்தது நல்லதுக்குதான் .......கேவலத்தில் கொண்டுபோய் விட்ரும்' ராமதுரை (73) எஸ்.ராமகிருஸ்ணன்*
7. *'எதுக்குடா அவனுக்கு மட்டு' என்னடா பிரச்னை'*
8. *நான் என் கண்ணா ...... கையை ஓங்குவான்*
9. *'நாம சம்பத்தைப் .... சம்பத் நிஜமாக வாழ்ந்தவன் (74) (எஸ்.ராமகிருஸ்ணன் ,2012)*
10. *'அவனோடு .... சண்டை' (40) மனச்சிதைவு நோயோ என்ற சந்தேகம்.*

*சாவு*

*சம்பத்தின் மரணம் அழிக்க முடியாதது*

*'சம்பத்தைப் பற்றி.... மூச்சுமுட்டுது" (எஸ்.ராமகிருஸ்ணன்)*

*சாவு இருவகையான தாக்கங்களை ஏற்படுத்துகிறது. ஐயோ – சிறுவயதிலேயே, எதையும் அனுபவிக்காமல் செத்துவிட்டானே – என்கிற கழிவிரக்கம்.*

*பாரதி புதுமைப்பித்தன் - போன்றோரின் மரணங்கள் சிறுவயதிலேயே ஏற்பட்டது. நமக்குப் பேரிழப்புத்தானே. இவர்கள் இன்னும் கொஞ்சகாலம் உயிரோடு இருந்திருந்தால் இன்னும் எவ்வளவு படைப்புக்கள் நமக்குக் கிடைத்திருக்கும் என்ற ஏக்கம் நமக்கு உண்டு.*

*சம்பத்தை அருகிருந்து அவன்படும் அவலங்களை ,வறுமை ,நோய் - இவற்றால் ஏற்படும் வலிகளைக் கண்ட நண்பனுக்கு அவனது மரணம் எதிர்பார்த்த ஒன்றுதான். இந்த வலிகளிலிருந்து விடுதலை பெற்றான் என்ற எண்ணம் நண்பனுக்கு.*

*எப்போதுமே மனிதமனம் சாவை எதிரியாகப் பார்ப்பதில்லை. வலிகளற்ற வாழ்க்கை வேண்டும். வலிகள் – உடல், மனம் எந்த வலியாக இருந்தாலும் சாவை வரவேற்கின்றர். மனித ஆசை நிறைவேற்றத்தில் 'இட்' 'ஈகோ' இரண்டிற்கும் இடையே ஒரு போராட்டம் நிகழும்.*

*அடக்கப்பட்ட ஆசை 'இட்' டில் அடங்கும்போதுதான் 'இட்' ஏற்றுக்கொள்ளாத நிலையில் 'ஈகோ'விற்கு கட்டுப்படாத நிலையில் தான் மனச்சிக்கல் உளக்கோளாறு ஏற்படும்.*

*சம்பத்தின் நடத்தைகளை ப்ராய்டிய வழி நின்று ஆராயலாம்:*

*சிக்மண்ட் ப்ராய்டு மனித மனத்தை id, ego, super ego எனப் பிரித்து ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு விதமான நடத்தைகள் இருக்கும் என்று கூறுகிறார்.இந்நடத்தைகளுக்கு Conscious mind, subconscious, unconscious mind அளவில் பதிந்துள்ள பதிவுகளே மூலகாரணமாகின்றன.*

1. *தான் நினைப்பதை நிறைவேற்றும் திறத்தில் காட்டுமிராண்டியாக (id) செயல்படுகின்றது. ஏனெனில் அவனுடைய இத்தகைய செயல்களால் பிறருக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை.*

2. *தமது '1D' தான் நினைப்பதை நிறைவேற்றும் திறத்தில் காட்டுமிராண்டியாக id' கருத்தை பிறர் மீது திணிக்கும் பண்டிக்கான காரணம் Ego'*

3. *பிறர் நலம் குறித்து சட்டை செய்யாத பண்பு என்பது தன்னலத்தின் வெளிப்பாடு. இதுவும் id என்கிற மனநிலை தான்.*

4. *பிறரை இக்கட்டுக்குள்ளாக்கி, கோப்படுத்தி மகிழும் Sadist மனப்பான்மை id தான் காரணம்.*

5. *புண்படுத்தி மகிழ்தலும் Sadist – id தான்.*
6. *யாருடனும் ஒத்துப் போகாமல் முரண்பட்டு நிற்பது, வாக்குவாதம் செய்வது – தன்னலம் - id தான் காரணம்.*
7. *சக மனிதர்களை விட வேறுபட்ட பழக்கவழக்கங்களைப் பின்பற்றுவதற்கான காரணம் id தான்.*
8. *அவனுடைய அத்துமீறல்களுக்கும் அவன் கண்மூடித்தனமான கோபங்களும்*
9. *வன்முறைகளில் - அப்பாவாக இருந்தாலும் முதலாளியாகஇருந்தாலும் - தவறு தன்மீதே இருந்தாலும் - அடித்து நொறுக்குவதும், அதீத பாலியல் உணர்ச்சிகளுக்கு ஆட்படுவதும் - id தான் காரணம்.. தன்னைப் பற்றிய மதிப்பீடுகளையும், கருத்துக்களையும் தனக்கு மிக நெருக்கமான (தனக்கு அவர்களால் எந்த தீங்கும் ஏற்படாது என்ற நம்பிக்கையின்பால்) - மனைவியிடமும் நண்பர்களிடமும் பகிர்ந்து கொள்கிறான்.*
10. *தன்மீது பிறருக்கான பயம், தான் கொலையாளியாகி விடுவோமா என்ற தன்பயம் ,எவரையும் நிம்மதியாக இருக்க விடாமை, வாழ்க்கை குறித்த பற்றற்ற பார்வை – இவற்றுக்கான காரணம் Super Ego – அவனுடைய Subconscious mind-ல் படிந்து கிடக்கும் குற்ற உணர்வு.*

    *சம்பத்துடைய இத்தகைய மனஉணர்வுகளை நுணுகி ப்ராய்டியக் கோட்பாட்டின்படி ஆராய்ந்தால் - ஒருவனுடைய சிறுவயதுக் குற்றச் செயல்கள் (historical psycho sexual development) – அதுவும் வெளிப்படுத்தப்படாத, தண்டனை பெறாத குற்றச்செயல்கள் - மனிதன் வளர வளர – அது மனஅழுத்தமாக உள்ளேயிருந்து அழுத்தத்தூன் அளவும் வளர ஆரம்பிக்கும்.*

    *அந்த வகையில் சம்பத்துடைய தங்கை சித்ரா – மகா லிங்கமலை சுனையில் விழுந்து இறந்தது இவனால் தான். ஆனால் யாருக்கும் தெரியாது; தண்டனையும் கிடைக்கவில்லை. யாரும் கண்டுபிடித்து வருவார்களோ தன்idயும் கொன்றுவிடுவார்களோ என்ற சிறுவயது பயம் - யாரையும் தன்னிடம் நெருங்கவிடாத – குரூர மனப்பான்மை கொண்டவனாக, குற்ற உணர்வு மிக்கவனாக, மன அழுத்தமுடையவனாகத் தான்தோன்றித்தனமாக, சாவை விரும்பி வரவேற்பவனாக, உடலியலில் அக்கறையற்று, உலகப்பற்றற்று – சீக்கிரமாகவே குடும்பத்தையும் பிரிந்து இறந்து விட்டான்.*

11. மாரியப்பன், அழகர், ராமதுரை – என சம்பத்துடைய நண்பர்கள் வெள;வேறு சூழ்நிலைகளில் தமிழ் இலக்கியம் படிக்கத்தள்ளப்பட்டவர்கள். தமிழ் இலக்கியம் படிப்பதை இன்று மட்டுமல்ல அன்றும் அக்கல்லூரி ஏளனமாகப் பார்த்தது. அதனால் இவர்களுள் தாழ்வு மனப்பான்மை.

ஆனால் சம்பத் 'கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சி குடிக்கத்தான் கற்பித்தானா?' என்ற பாடலை அடிக்கடி உச்சித்த சாமியாரின் சொற்கள் தான் தன்னை இங்கு வர வைத்தது எனத் தன்னை இலட்சியவாதியாகக் காட்டிக் கொள்கிறான். குறிப்பிட்ட இயக்கத்தில் ஈடுபடுவது, அறிவு ஜீவிகளின் தொடர்பு – அறிவு ஜீவித்தனமான சொற்கள் பயன்பாடு, தன்னுடைய கருத்துக்களைக் கோபத்துடனும், பிறர் கருத்துக்களைக் கேலி செய்தும் அவர்களைத் தன் ஆளுமைக்கு (cover dominance) உட்படுத்துகிறான்.

அவர்களுக்கு ஏற்கனவே உள்ள பயம்., அச்சம், தாழ்வு மனப்பான்மை – சம்பத் எது சொன்னாலும், எதைச் செய்தாலும் மறுக்கத் தோன்றாமல் பின்பற்றந் செய்கிறது.

அவன் செய்யும் அத்துமீறல்களைத் தாங்களும் செய்ய வேண்டும் என்பது இவர்களுடைய unconscious mind, conscious mind – குடும்பம் தவறாக எண்ணும், சமூகம் - நான்கு பேர் என்ன நினைப்பார்கள்? பெயர் கெட்டு விடும் என்ற பயம் அத்தவறுகளைச் செய்ய முன்வராமல் தடுக்கிறது. ஆனாலும் சில தவறுகளை அவனைப் பயன்படுத்தி தங்கள் பெயர் வெளிவராத போர்வையில் செய்கின்றனர். தங்களால் அவன் செய்கிற அத்துமீறல்களைப் போலச்செய்ய

| பண்புகள் | காரணம் | உளவியல் கூறு வகை |
|---|---|---|
| நினைப்பதை நிறைவேற்றல் | மன அழுத்தம் | ஈகோ |
| கருத்துத் திணிப்பு | எதிர்மறை மனநிலை | ஈகோ |
| பிறரைக் கண்டுகொள்ளாமை | தன்னலம் | இட், சாடிச்ட் |
| இக்கட்டுக்குள்ளாக்கல் | ஆழ்மன ஏக்கம் | ,, |
| புண்படுத்தி மகிழ்தல் | ஆழ்மன ஏக்கம் | ,, |
| சூழலுடன் முரண்படல் | தன்னலம் | ,, |
| வித்யாசமான பழக்கவழக்கங்கள் | மன அழுத்தம் | இட் |
| அத்துமீறல்கள் | மன அழுத்தம் | இட் |
| வன்முறைகள் | மன அழுத்தம் | இட் |

முடியவில்லையே என்ற ஏக்கம் ஆழ்மனதில் அழுந்திக் கிடக்கிறது.

சம்பத்தடைய மனநிலையில் பெரும்பாலும் இட் தான் ஆழ் மனதில் அழுத்திக் கொண்டிருப்பதை தீர்மானிக்க முடிகின்றது.

தீர்வுகள்:

1. சிறுவயதில் தங்கை சித்ரா இறந்த பிறகுதான் இவனுள் பல உளவியல் சிக்கல்கள் ஏற்பட்டுப் பிறழ்நடத்தை ஆரம்பித்திருக்கும். அதைக் கவனித்து, பெற்றோர் அல்லது குடும்பத்தினர் தைரியம், அறிவுரை, ஆறுதல் கூறியிருக்கலாம். முக்கியமாக அவனது அக்காவுக்கு இவன்தான் சித்ராவின் சாவுக்கக் காரணம் எனத் தெரியும். அவள் இவனுக்கு ஆதரவாக இல்லாமல், வாய்;ப்புக் கிடைக்கும் போதெல்லாம் கிள்ளுவது, அடிப்பது என வெறுப்பை விதைத்தது தவறு.
2. வகுப்பறையில் வீண் வாக்குவாதங்களில் ஈடுபட்டும், ஆசிரியர் பாடம் நடத்தியமை பாராட்டத்தக்கது. வகுப்பு முடிந்த பின் அவனைத் தனியே அழைத்து, நட்பாகப் பேசி, அவனுடைய குடும்ப நிலை, பொறுப்பு, எதிர்கால லட்சியம், வேலை, வாழ்வு --என அவனை அவனுக்கு உணர்த்தி அவனை மீட்டெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம்.
3. குறிப்பிட்ட இயக்கத்தின் தீவிர ஈடுபாட்டால் படிப்பை இடையில் நிறுத்துகிறான். இவன்தான் முதல்தலைமுறை பட்டதாரியாக முயற்சிப்பவன். அவனைப் பயன்படுத்திய இயக்கத்தினர்-- யாழினியின் அப்பா-- அவள் படிப்பை முடிக்க உறுதுணையாக

இருந்தாரே: சம்பத்தின் கல்வி குறித்தோ, எதிர்காலம் குறித்தோ கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. தன் இயக்க வளர்ச்சிக்காக இத்தகைய இளைஞர்களைப் பலிகடாக்குவதை இன்றும் காணலாம். அவர்களுக்குத் தகுந்த அறிவுரை கூறுவதன் மூலம் தெளிந்த சிந்தனையை உருவாக்க வேண்டும்.

4. நண்பர்களும் சம்பத் என்ன கூறினாலும் என்ன செய்தாலும் கண்மூடித்தனமாக வரவேற்பது தவறு. நல்ல நட்பு என்பது 'இடித்துரைத்து" முதலில் அவனது கடமை--குடும்பத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்றல் என்பதை வலியுறுத்த வேண்டும். அவனுக்குப் பின்ன்ிுல் நின்று கொண்டு தாங்களும் ஒருசில தவறுகளுக்கு உடனிருப்பதும், செய்வதும் கண்டிக்கத்தக்கது. நண்பர்களில் யாரும் ஆசிரியர்களுடன் நெருக்கமான நட்பில் இருந்ததாகவோ நல்ல் முயற்சியில் ஈடுபட்டதாகவோ தெரியவில்லை.
5. மீண்டும் வீட்டுக்கு வந்த சம்பத்திடம், மாமா அன்பு காட்டியதைப் போலப் பிறரும் அன்பு காட்டி, அவனை விவசாயத்தில் ஈடுபடுத்தி, திருமணம் செய்வித்து குடும்பமாக்கியிருக்கலாம். வன்முறையைத் தவிர்த்திருக்கலாம்.
6. திருமணத்தில் ஜெயந்தி சற்று யோசித்திருக்கலாம். அவன் கேட்டவுடன், அவனைப் பற்றியோ, அவனது பின்புலம் பற்றியோ விசாரிக்காமல், தம் குடும்பத்திடமும் சொல்லாமல் தான்தோன்றித்தனமாக முடிவெடுத்தது தவறு. திருமணத்திற்குப் பிறகாவது அவனது வேலை குறித்து அவள் கண்டிப்பாக இருந்திருக்கலாம். அவனது மூர்க்கத் தனத்திற்குப் பலியாகிவிட்டாள்.

மாணவர்களிடமிருந்து:

| பாலினம் | வயது | முன்மாதிரி | சிறுவயது பாராட்டு | சிறுவயது கசப்பு அனுபவம் | சிறுவயது இனிய அனுபவம் | இன்றைய மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| பெண் | 21 | கணக்கு ஆசிரியர் | முதல் பேனா எழுத்தழகை அம்மா பாராட்டல் | தம்பிக்குப் பதில் தன்மீது பழி சுமத்தல் | குற்றாலத்திற்குப் படிக்க அனுப்பியது | சிறப்பான செயற்பாட்டாளர் |
| பெண் | 22 | தமிழ் ஆசிரியர் | முதல் ஓவியம் –பள்ளி பாராட்டல் | இல்லை | குடும்பம் சுற்றுலா சென்றது | மாணவிகளிடம் அக்கறை கொண்டவர் |
| ஆண் | 22 | காவலர் | ஓட்டப்பந்தயம் பாராட்டு பெறல் | | | |
| ஆண் | 22 | அப்பா | -- | ஒரு நாள் முழுதும் செய்யாத தவறுக்கு வகுப்பே வெயிலில் நின்றது | பள்ளியின் முதல்நாள் விளையாட்டு | பொறுப்பாகச் செயல்படுபவன் |
| ஆண் | 22 | அப்பா | சமையலைப் பிறர் பாராட்டியது | ---- | குடும்ப சுற்றுலா | குழுவுடன் ஒத்து சிறப்பான செயல்பாடு |
| ஆண் | 23 | இல்லை | இல்லை | தொங்கவிட்டு அடித்தது,நோய் வாய்ப்பட்டது | இல்லை | தன்னம்பிக்கையற்றவன் |

இந்தத் தரவுகள் வழி சிறுவயது இனிய அனுபவங்கள் நன்னடத்தையையும்,நேர்மறை எண்ணங்களையும் ஒத்தியைவையும் ஒருவரிடம் வளர்க்கின்றது. அதேசமயம் கசப்பான அனுபவங்கள் எதிர்மறை எண்ணத்தையும் விரக்தியையும் வளர்க்கின்றJ எனத் தெரிய வருகின்றது

நிறைவுரை:

இந்த ஆய்விலிருந்து பெறப்பட்ட முடிவுகள்:

குடும்பத்திலோ, வகுப்பிலோ சம்பத் போன்ற இளைஞர்களின் பிறழ் நடத்தையைக் கண்டால் அவர்களை வெறுக்கக் கூடாது: பிறர் முன்னிலையில் அறிவுரையோ, தண்டனையோ தரக் கூடாது.

தனியே அழைத்து, நட்புடன், ஆதரவாகப் பேசி அவனது கடமை குறித்து வலியுறுத்த வேண்டும்; யாருடனும் ஒப்பிடக்; கூடாது.

இதை ஒரே நாளில் செய்யக் கூடாது. அவ்வப்போது அவனைக் கவனித்து, அவனுடைய முன்னேற்ற நிலை, திறமைகள், குடும்பநிலை குறித்து விசாரிக்கலாம். அவனுடைய நண்பர்களையும் இந்த வட்டத்திற்குள் கொண்டு வரலாம்.

போட்டிகளில் பங்கேற்கச் செய்வதன் மூலம், அவர்களுடைய கருத்துக்களையும் கேட்பதன் மூலமும், அவர்களை அங்கீகரித்துப் பொறுப்புக்களை வழங்குவதன் மூலமும் அவர்களுடைய *id, ego* வை மாற்றமடையச் செய்து, மேம்பட்ட உள்ளத்தை உருவாக்குவதன் மூலம் தன்னம்பிக்கையுள்ள மனிதனாகவும், இலட்சியவாதியாகவும் நல்ல மனிதனாகவும் அவனை மாற்றி இச்சமுதாயத்திற்கு உருவாக்கித்த தரலாம்.

பயன்பட்ட நூல்கள்:


1. முனைவர் செ.சாரதாம்பாள், 2019, இலக்கியமும் உளப்பகுப்பாய்வும் (கொள்கைகளும் பயில்முறைகளும்),முதல் பதிப்பு, லொங்க,சென்னை.
2. பேரா. சி.சோமசுந்தரம், 2017, குமாரப் பருவம் இளைஞர் உளவியல்-ஒரு பார்வை, முதற்பதிப்பு, ஆனந்த் எண்டர்பிரைச,சென்னை.
3. மு.தங்கேவரன், 2018, எ .ராமகிரு ணன் நீரிலும் நடக்கலாம் சிறுகதைத் தொகுப்பில் உளவியல் –எம்.பில். ஆய்வேடு, ANJAC, சிவகாசி.
4. புலியூர் கேசிகன், 2016, திருக்குறள் உரை-பதிப்பு, பாரதி புத்தகாலயம்,சென்னை.
5. எஸ்.ராமகிருஸ்ணன், 2012, உறுபசி, மூன்றாம் பதிப்பு, உயிர்மை பதிப்பகம்,சென்னை.
6. இதழ் — தினமலர் – நாளிதழ், நெல்லைப் பதிப்பு, கலந்துரையாடல், முதுகலை மாணவர்கள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாகலாபுரம். —22.12.22.


********* ********* ********** ********* ********* ********** ********** **********